# திருக்கோணாசல வைபவம்

வே. அகிலேசபிள்ளை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
வீரகத்தி விநாயகர் துணை

# திருக்கோணாசல வைபவம்

இந் நூல்
திருக்கோணமலை
ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை
அவர்களால் 1889 ஆம் ஆண்டில்
சத்தியரூபமாக இயற்றப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருக்கோணாசல வைபவம் |
| ஆக்கியோன் | : | ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை. |
| பதிப்புரிமை | : | த.த ஞானேஸ்வரன். |
| முதற்பதிப்பு | : | 1950 |
| இரண்டாம் பதிப்பு | : | 1999 |
| மூன்றாம் பதிப்பு | : | 2000 |
| விலை | : | ரூபா. 150/= |

**தத்துவ ஞானக் கலைச்சாலைப் பிரசுரம்**
31/21, டோபாஸ் வீதி, கொழும்பு - 2, ஸ்ரீலங்கா.
தொலைபேசி: 094 - 1 - 331439




உ

# பதிப்புரை

இற்றைக்கு சுமார் 4500 ஆண்டுகளுக்கு முன் தென் குமரிநாட்டின் ஓர் அங்கமாக இலங்கை இருந்தது. அக் காலத்தில் தென் குமரிநாட்டை ஆண்டவன் "நிலந்தரு திருவிற் பாண்டியன்" என்று தொல்காப்பியம் வாயிலாக அறியக்கிடக்கிறது. இவன் "தென்றிசையாண்ட தென்னவன்" என்று சிலப்பதிகாரத்தாலும் "வாடாச் சீர்த் தென்னவன்" என்று கலித்தொகையாலும் "நெடியோன்" எனப் புறநானூற்றாலும் குறிக்கப்பட்டான். தென் குமரிநாடு ஏழுநாடு, முநாடு என இரு பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஏழுநாடு ஏழ்நாடு எனவும் அழைக்கப்பட்டது. இந்த ஏழ்நாடு ஏழ்தெங்கு, ஏழ் மதுரை, ஏழ் முன்பாலை, ஏழ் பின்பாலை, ஏழ்குன்று, ஏழ் குணக்கரை, ஏழ் குறும்பனை என்று ஏழு மாநிலங்களை உள்ளடக்கியதாக இருந்திருக்க வேண்டும். அதனை அடியார்க்குநல்லார் வாயிலாக அறிய முடிகிறது. ஏழ்நாட்டை ஆண்ட காரணம் பற்றி நெடியோனுக்கு "ஏழ்வாணன்" என்ற பெயரும் வழங்கிற்று. இலங்கையின் பண்டைய பெயர் "எழு" என்றும் அதனால் அங்கு வழங்கிய மொழியும் "எழு" என்று அழைக்கப்பட்டதாக சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றன. இந்த ஏழுநாட்டு மக்கள் "ஏழுவர்" என அழைக்கப்பட்டதாக புறநானூற்றில் "வால்மீகியார்" கூறுகின்றார். இவ்வாறே முநாட்டு மக்கள் "முவர்" என அழைக்கப்பட்டனர். இவர்கள் கடலோடிகளாக வாழ்ந்தவர்கள். இக்கடலோடிகளே "மூவர்ஸ்" (Moors) என்று ஆங்கிலேயரால் பிற்காலத்தில் அழைக்கப்பட்ட கடலோடிகள். இவர்கள் திரைகடலோடி வாணிபம் செய்தவர்கள். மேற்கே எகிப்து, பாபிலோனிய நாடுகளுடனும் கிழக்கே சீனத்துடனும் இவர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். இத்தென் குமரிநாட்டை ஒருகுடைக்கீழ் ஆண்ட தென்னவன் "ஏழ்வாணன்".

முதலாவது கடற்கோளால் குமரிநாடு அழிந்துபோக மக்கள் பலரும் புலம் பெயர்ந்து வடக்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் சென்று வெவ்வேறு நாடுகளில் குடியேறினர். கடற்கோள் அழிவிலிருந்தும் எஞ்சிய நிலப்பரப்பை மீண்டும் கட்டி எழுப்பி ஒளி மிக்க நாடாக ஆக்கிய பெருமை ஏழ்வாணனையே சாரும். இவ்வாறு செல்வச் செழிப்பும் பண்பாட்டுச் சிறப்பும் மிக்க நாட்டை ஒளி மிக்க நாடு எனும் பொருள்பட "எல்லம்" என்றும் "இலங்கை" என்றும் அழைத்தார்கள். "எல்லம்" என்ற பெயர் பிற்காலத்தில் "ஏழம்" ஆகவும் "ஈழம்" ஆகவும் திரிபடைந்தது. அதே போல "ஏழ்வாணனை" "எல்லாளன்" ஆக்கினான். "எல்" என்றால் ஒளி எனப் பொருள்படும். இதே சொல் வடமொழியில் இரவை குறிக்கும்.

தென்தமிழ் மக்களையும் அவர்கள் பண்பாட்டையும் வெறுத்த ஆரியர் "வைரமான் இடத்துக்கொண்ட குரோதம் காரணமாக, இருளை ஆள்பவன் எனும் பொருள்பட இராவணன் எனும் பெயரிட்டு அழைக்கலானார்கள்.

இலங்கை வரலாற்று நூல்களில் ஒன்றான "இராசாவளி"யில் துவாபர யுகத்தில் இலங்கையை இராவணன் என்ற மன்னன் ஆட்சி செய்ததாகவும், அவன் காலத்தில் ஒரு பெரிய கடல்கோள் ஏற்பட்டதாகவும், அதில் அவனுடைய கோட்டையும், 25 மாளிகைகளும், இன்றைய மன்னாருக்கும் தூத்துக்குடிக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்த 4 லட்சம் வீதிகளும் நீரில் ஆழ்ந்து போனதாகக் கூறுகிறது. இக்காலம் கி.மு. 2387 என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். ஒளிபிழந்து இலங்காது (பிரகாசியாது) இருந்த நாட்டை இலங்கும் நாடாக மாற்றிய முன்னவனை, இலங்கை வேந்தன் என்று இதிகாசங்கள் புகழ்ந்து பேசும். இவன் ஒரு சிவபக்தனாகவும் சிறந்த சன்மார்க்கவானாகவும் விளங்கினான். இலங்கையை சிவ பூமியாக ஆக்கிப் பல சிவாலயங்களை கட்டினான். அவன் வழிபட்ட சிவத்தலங்களில் பிரதானமானது திருக்கோணேஸ்வரம்.

இப்புனிதக் கோவிலின் உண்மை வரலாறு இன்று மறைக்கப்பட்டும் திரிபுபடுத்தப்பட்டும் வருகிறது. அதனை தவிர்த்து உண்மை வரலாற்றை உலகறியச் செய்யவும், தமிழினம் தன்னுடைய பழம்பெரும் பாரம்பரியச் சிறப்பை அறிந்து அதனைக் காத்து தலைநிமிர்ந்து வாழவும், உண்மை வரலாற்று நூல்களைத் தேடிப் பதிப்பிக்க முனைந்தோம்.

அதன் முதற் படியாக 1889ம் ஆண்டளவில் ஸ்ரீமான். வே. அகிலேச பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட திருக்கோணாசல வைபவம் என்னும் இக்கோவிலின் உண்மை வரலாற்று நூலை 1999ல் மறுபதிப்புச் செய்தோம்.

பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, திருக்கோணாசல வைபவத்துடன் கோணேசர் கல்வெட்டை பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்களின் பொழிப்புரையுடனும் பண்டிதர் இ. வடிவேலு அவர்களது திருக்கோணமலை நாகதம்பிரான் பற்றிய கட்டுரையுடனும் சேர்த்து மீண்டும் பிரசுரிக்கிறோம். தமிழ் உலகு எமது பணிக்கு ஆதரவு நல்கும் என்பது நம்பிக்கை.

பதிப்பாசிரியர்.
அடியார்க்கடியன்

தத்துவ ஞானத் தவச்சாலை
கொழும்பு 20-06-2000



உ

# இரண்டாம் பதிப்புரை

தேனினும் இனிய செந்தமிழ் இன்று திக்கெட்டும் பரவி வளரும் பாரினில் பலபேர் பல விதத்திலும் உயர்வான பங்களிப்பை நல்கிக்கொண்டிருக்கும் இந்நாளில் யானும் ஏதாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் எனக்குள் நீண்டு எழுந்துகொண்டிருந்தது. அப்போ, கோணேசர் ஆலயத்தில் அண்மையில் திருக்கோணமலையைச் சேர்ந்த நண்பர் ஒருவரால் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரக் கும்பாபிஷேக மலர் எனக்குக் கிடைத்தது. அம்மலரின் ஊடாக திருக்கோணேசப் பெருமானின் மகிமையையும், அக் கோவிலின் பல நூற்றாண்டுப் பின்னணியைக் கொண்ட வரலாற்றையும் ஓரளவு அறிந்துகொள்ள முடிந்தது.

இப்புனிதக் கோவிலின் உண்மையான வரலாறு இன்று ஒருசிலரால் திரிபுபடுத்தப்பட்டு வருகிறது. இதனால் எமது வருங்கால சந்ததியினர் உண்மை வரலாற்றை அறியாது தவறாக வழிநடத்தப்படலாம். அதனைத் தவிர்க்க இக்கோவில் பற்றிய பழமையான வரலாற்று நூல்கள் ஏதும் கிடைக்குமா எனத் தேடிக்கொண்டிருந்த வேளையில், 1889ம் ஆண்டளவில் ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை என்பவரால் எழுதப்பட்டு 1950ல் அவரது வழித்தோன்றல் ஸ்ரீமான். அ. அளகைக்கோன் என்பவரால் வெளியிடப்பட்ட திருக்கோணாசல வைபவம் எனும் நூல்பற்றி அறிந்தேன். அதன் பிரதியை பெற முயன்றபோது அந்நூல் இன்று கிடைத்தற்கரியதாகவும் ஒரே ஒரு பிரதிமட்டும் ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளை அவர்களின் வழித்தோன்றல் திரு அ. கணேசலிங்கம்அவர்களிடம் இருப்பதாகவும் அறிந்தேன்.

எனது திருமலை நண்பர் ஒருவர் மூலம் திரு. அ. கணேசலிங்கம் அவர்களுடன் தொடர்புகொண்டு அந்நூலை மறுபதிப்புச் செய்ய அனுமதியையும் ஒரு பிரதியையும் கேட்டிருந்தேன். திரு அ. கணேசலிங்கம் அவர்கள் பெருமனம்கொண்டு அதன் பிரதியையும் மறுபதிப்புக்கான அனுமதியையும் தந்துதவினார்கள். அத்துடன் இத்தகைய பயன்தரு முயற்சிகளை மேலும் விரிவுபடச் செய்யுமாறும் கேட்டுக்கொண்டு தமது ஆதரவையும் வாழ்த்துக்களையும் நல்கினார்கள். அவர்களுக்கு எனது மனங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது வேண்டுகோளுக்கிணங்க இந்நூல் வெளிவருவதற்கு ஆரம்பம் முதல் பக்கதுணையாக இருந்து, வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் வெளியிடஉதவிய நண்பர் திருமலை திரு. கணேஸ் கீர்த்திதாஸ் அவர்களுக்கும் எமது அன்புகலந்த நன்றிகள் உரியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாத புகழுடைய தமிழ் நூல்கள் தமிழ் மொழியில் வருதல் வேண்டும் என்ற நோக்கில் சமயம், தத்துவம், அறிவியல், வரலாறு முதலிய துறைகளில் நல்ல பல நூல்களை ஆக்கியும் அச்சேற்றியும் வரும் சித்தர் மெய்ஞான ஆய்வக பிரசுர உரிமையாளர் அடியார்க்கடியன் அவர்கள் இந்நூலை சிறப்பாக பிரசுரித்து உதவியமைக்கு எமது நன்றிகள் உரியதாகட்டும்.

காலங்கள் மாறும் போது கூடவே கருத்துகளும், கலாசாரங்களும் மாறலாம். ஆனால் உண்மை வரலாற்றை மாற்றவியலாது. அப்படி மாற்றினாலுங்கூட வரலாறு மாற்றியவர்களை மன்னிக்காது. இது உலகறிந்த உண்மை. எனவேதான் பழமை வாய்ந்த நூலை ஒதுக்காமல் மாற்றம் ஏதும் செய்யாமல், கருத்துக்களை உள்ளது உள்ளபடியே புதுப்பொலிவுடன் பிரதியாக்கம் செய்து வெளியிடுகிறேன்.

எனது இந்த முயற்சிக்கு ஊக்கம் தந்து உறுதுணையாக இருந்த எனது பெற்றோருக்கும் எனது தாழ்மையான வந்தனங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு உருத்துடையவர் சிவன்
ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு கருத்துடையவர் சிவன்
ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு பலம் சேர்ப்பவர் சிவன்
ஓம் என்ற ஓங்கார ஒலிக்கு நலம் சேர்ப்பவர் சிவன்
ஓம் ஓம் ஓம் இதுவே ஓம் நமசிவாய எனும் மாமந்திரம்

தம்பு தம்பையா
ஞானேஸ்வரன்

ஹம்பேர்க் - ஜேர்மனி.
1999 - 4 - 12



# முதலாம் பதிப்புரை

இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் எமது தந்தையார் ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்கள் வெகு பிரயாசத்துடன் பல இடங்களிலும் சென்று சென்று தேடி எடுத்த நூல்களிலிருந்து தேர்ந்து எடுத்துக் கோத்து இச் சரித்திரத்தைத் தெளிவான வசனநடையில் எழுதியுள்ளனர். இதை அச்சேற்றி வெளியிடுவதற்குத் தடையாகப் பல வசதிக்குறைவுகள் நேர்ந்தமையின், வெளியிடாது 1-1-1910 ல் சிவபதமடைந்தார்.

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் இவ்விடம் வந்த ஸ்ரீமான் பொன். இராமநாதன் துரையவர்கள் இந் நூலைப் பற்றிக் கேள்விப்பட்டு, எமது தமையனார் அ. இராசகோன் அவர்களிடம் கேட்டு வாங்கிப் பார்வையிட்ட பின் இதை வெளியிடும்படி கேட்டார்கள். அவரும் அதற்கிசைந்து வெளியிடுவதற்கு எத்தனித்தார். பின் அவரும் நோய்வாய்ப்பட்டுத் தேகவியோகமானார்.

அக்காலந் தொடக்கம் திருக்கோணமலையிலுள்ள சைவ அபிமானிகள் பலரும் இந்நூல் இன்னும் சிலகாலமிருந்தால் சிதைந்து போகுமாகையால் இதனை அச்சேற்றி வெளியிடும்படி எம்மைக் கேட்டுக்கொண்டார்கள். நாமும் அவர் கேள்விக்கு உடன்பட்டுப் பிரகடனஞ்செய்து முடித்தோம்.

அ. அளகைக்கோன்.

திருக்கோணமலை,
விகிர்தி வருடம்
1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரிமை

வரலாறு ஒரு வரப்பிரசாதம். இது எல்லாத் தேசத்திற்கும், எல்லா இன மக்களுக்கும் பொருந்தும். இப்படிப்பட்ட வரலாற்றுப் பின்னணியைத் தக்கவைக்க எடுக்கும் முயற்சி என்பது முழு மனித குலத்திற்குஞ் செய்யும் மகத்தான தொண்டு என்பதை நாம் முதற்கண் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் திரிபுபடுத்தப்பட்ட வரலாறுகளும் இன்று நம்மிடையே உலாவி வலம் வந்துகொண்டுதான் உள்ளன. இவற்றின் உள்நோக்கங்கள் ஒரு சிலரை மாத்திரம் திருப்திப்படுத்தப் பயன்படுவதனால் உண்மையான வரலாற்றில் உள்ள உயிரோட்டம் அவற்றில் இருப்பதில்லை.

கிழக்கிலங்கையின் பாரிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட திருக்கோணமலையும், திருக்கோணேசர் ஆலயமும் எல்லாத் திசைக்கும் அப்பாற்பட்டது. காரணம், மகா வல்லமை பொருந்திய மாதொருபாகன் மாதுமை அம்பாள் சமேதராய் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஒரு புனித தலமாக இன்னும் விளங்குவதுதான்.

எனது முதாதையாரான ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்களால் 1889ம் ஆண்டு ஆக்கப்பட்ட திருக்கோணாசல வைபவம் என்னும் நூல் பல பெரியோர்களின் இடையறாத வேண்டு கோளுக்கிணங்க 1950 ஆண்டு எனது தந்தையாரான ஸ்ரீமான் அ. அளகைக்கோன் அவர்களால், பிரசுரித்து வெளியிடப்பட்டது. இன்று இவ்வரிய நூல் எம்மிடையே அருகி மறைந்து போய்விடுமோ என நான் கவலைகொண்டிருந்த சமயம், Hamburg. Germany இல் வசிக்கும் இலண்டனாகரான திரு துரையா குகனேஸ்வரன் என்பவர் தனது தாய் தந்தையரின் வேண்டுகோளின்படி அவரின் நண்பர் மூலமாக என்னைத் தொடர்புகொண்டு இவ்வரிய நூலை மீண்டும் வெளியிட்டு மக்களிடையே பிரபல்யம் அடையச் செய்யவேண்டும், குறிப்பாக இன்றைய இளைய தலைமுறையினருக்கு அழகு மிகுந்த திருக்கோணமலையின் உண்மைச் சரித்திரம் என்றும் அழியா பசுமையுடன் அவர்களின் மனங்களில் தமழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை எனக்கு வெளிப்படுத்தி இந் நூலின் மறுபதிப்புக்கு என்னுடைய சம்மதத்தைக் கோரினார். நான் எனது பூரண சம்மதத்தை அவருக்குத் தெரிவித்ததோடு, இதுவரை காலமும் பத்திரப்படுத்திப் பாதுகாத்து வைத்திருந்த இந் நூலின் பிரதியை மறுபதிப்பிற்காக அவரிடம் கொடுத்து அவரது முயற்சிக்கு எனது ஆதரவையும், ஆசிகளையும் நல்குகின்றேன். - ஓம் நமசிவாய.

A. GANESHALINGAM 16-4-99
VISVANATHA SWAMI SIVAN KOVIL

A. GANESHALINGAM 16-4-99
Manager & Trustee
VISVANATHA SWAMI SIVAN KOVIL



# முன்னுரை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால், பாடல்பெற்ற சிவஷேத்திரங் களுள் ஒன்றாகிய திருக்கோணாசலத்தின் சரித்திரம் வடமொழி நூலாகிய தக்ஷிணகைலாய மான்மியத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதாக அறியக் கிடக்கிறது. அந்நூல் கோணைநாயகர் கோயிற் பூசகர்களாகிய இருபாகை முதன்மைகளிடமிருந்து, சில வருடங்களின் முன் மோசம்போய்விட்டது.

தென்மொழியில் செகராசசேகர மகாராசாவினாற் பாடப்பெற்ற தக்ஷிணகைலாய புராணமொன்றே இவ்விடத்து வழங்குகின்றது. அதுவன்றி பிற்காலத்தில் சில வித்துவான்களால் அந்நூலை ஆதாரமாகக்கொண்டு பாடப்பெற்ற கோணேசரைப் புராணம், கரசைப் புராணம் எனும் நூல்களுமுள. அவைகளிலும் திருக்கோணாசல மான்மியம் மிகச்சுருக்கமாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. இதுவன்றி, குளக்கோட்டு மகாராசாவினால் ஆக்கப்பட்ட கல்வெட்டுச் சாத்திரம், பெரிய வளமைப் பத்ததி, கல்வெட்டு என்னும் மூன்று நூல்களுமுண்டு. அவைகளில், குளக்கோட்டு மகாராசா திருப்பணி செய்த சரித்திரமும், கோணைநாயகர் கோயிற் சட்டதிட்டங்களும் சொல்லப்பட் டிருக்கின்றன.

திருக்கோணாசல மான்மியத்தை அறியப் பேரவாக்கொண்டிருக்கும் நம் சுதேசிகளுக்கு மேற் சொல்லப்பட்ட நூல்கள் கிடைப்பது மிக அருமையா யிருக்கின்றது. அதுபற்றி, மேற்சொல்லப்பட்ட நூல்களை மிகுந்த பிரயாசத் தினாற் சம்பாதித்து, அவைகளிலுள்ள சரித்திரங்களனைத்தையும் ஒன்றாகத் திரட்டி, யாவரும் எளிதில் அறியும்பொருட்டு வசனநடையிலியற்றி அரங் கேறுதலை விடுத்திருக்கின்றேன்.

ஆயினும், 'தக்ஷிணகைலாய மான்மியம்' என்னுந் தேன் சமுத்திரத்தை உண்டு தெவிட்டியிருக்கும் மகாத்துமிகள், அச்சமுத்திரத் தினின்றும் உற்பத்தியான சிறு வாய்க்கால் போன்ற இந் நூலைத் தம் உள்ளங்களைத் தேனாகக் கருதுவார்களாக.

ஆன்றோர் இதனுநலத்தைக் கண்டு இகழாது, காணப்படும் பிழை களைத் திருத்திச் சுத்தமாகக் கைக்கொள்ளுமபடி தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றேன்.

இங்ஙனம்
ஆக்கியோன்.

திருக்கோணமலை,
சர்வதாரி. (1889.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மதிப்புரை

Dr. K. Kanapathipillai, B.A., Phd (London).
Vidhvan Annamalai University. Professor of Tamil University of Ceylon.

திருக்கோணமலை ஈழநாட்டிலுள்ள பழைய ஊர்களுள் ஒன்று. இது பல்வகையாலும் சிறப்புற்று விளங்கியது. மிகப்பழைய காலந்தொட்டே இது தமிழ்க் கலைக்கும் பண்பாட்டிற்கும் நிலைக்களமானது. சைவ மக்களால் தக்ஷிணகைலாசம் என்னும் பெயரால் அழைக்கப்பட்டுத் தூய்மை செறிந்த இடமாகப் போற்றப்பட்டது. சைவ நாயன்மார்களுள் ஒருவராகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகத்தைப் பெற்ற பெருமையும் தொன்மையும் வாய்ந்தது. நீர்வளத்தைத் அளிக்கும் குளங்கள் பல அண்மையில் உள்ளமையால் குறைவற்ற உணவுப்பொருளினை உடையது. இயற்கை பாதுகாப்பமைந்த பெருந்துறைமுகத்தைக் கொண்டுள்ளமையினால் இன்று ஆசியநாடுகளிலுள்ள சிறந்த கடற்படைத் தளங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இத்துணைப் பெருமைவாய்ந்த திருக்கோணமலையோடு தொடர்பு பூண்ட வரலாறுகளும் புராணக்கதைகளும் பலவுள. நம் கலையும் பண்பாடும் வீழ்ச்சியுறாது வளரவேண்டுமாயின் இவற்றையெல்லாம் நாம் கட்டாயமாக அறிந்திருக்கவேண்டும். அவ்வறிவைப் பெறுதற்கு அறிஞர் அகிலேசபிள்ளையவர்கள் ஆராய்ந்து தொகுத்தியற்றிய "திருக்கோணாசல வைபவம்" என்னும் இந் நூல் பெரிதும் பயன்படும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இலக்கண இலக்கிய அறிவிற் சிறந்தவரும் கவிஞருமாகிய பிள்ளையவர்கள் சமயப் பற்றும் மிகுதியாயுடையவர்கள். அது இந்நூலைப் படிப்பவரெவர்க்கும் எளிதிற் புலனாகும். ஆசிரியர் இந்நூலைத் தவிர, கோணைநாயகர் பதிகம், வெருகல் சித்திரவேலாயுதசுவாமி பதிகம், விசாலாட்சியம்மை பெருங்கழிநெடில் விருத்தம் முதலிய இப்பகுதியோடு தொடர்பு பூண்ட பல தோத்திர நூல்களையும் இயற்றியுள்ளார். அறிஞர் அகிலேசபிள்ளை அவர்கள் புரிந்த அருந்தொண்டிற்குத் தமிழுலகமும் சைவ உலகமும் கடப்பாடுடையன. பிள்ளையவர்கள் இயற்றிய நூலை அச்சேற்றி உலகிற்குப் பயன்படச்செய்த அவர் புதல்வர் அளகைக்கோன் அவர்கட்கும் நாம் என்றும் நன்றி உடையவராயிருத்தல் வேண்டும்.

க. கணபதிப்பிள்ளை.

விகிர்தி வருடம் ஆவணி மாதம்
[illegible] நாள்



உ

# மதிப்புரை

கோணைநாயகர் கோயில் ஆதீனவாசிரியர்
பிரம்மஸ்ரீ கு.கு., கா.கு., ப.கு. யோகீஸ்வரக்குருக்கள் அவர்கள்
எழுதியுதவியது

தக்ஷிணகைலாசமாகிய திருக்கோணாசலத்தின் வரலாற்றுச் செய்திகளையும், சிறப்புக்களையும் முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் பண்டைக் காலச் சைவமக்கள் எவரும் எழுத முன்வராதிருப்ப ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்கள் பல வருடங்களாக ஆராய்ச்சிசெய்து தொடர்புற இந் நூலைக் கரலிகிதப் பிரதியாக எழுதி, 1889-ம் ஆண்டில் நிறைவு செய்து வைத்தார்கள்.

குளக்கோட்டு மகாராசாவால் கட்டப்பட்ட ஸ்ரீ கோணைநாயகரது ஆலயமும் மற்றும் திருப்பணிகளும் பின் வந்த பறங்கியரால் கைப்பற்றப்பட நேர்ந்த அமையத்தில், மனம் பொறாத சில சைவமக்கள் ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள், மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் ஆதியவற்றைப் பாதுகாக்கும் முறையில் எடுத்து, நகரத்தின் சில இடங்களில் குழி தோண்டிப் புதைத்து மறைத்ததாகக் கர்ணபரம்பரையான வதந்திகள் உள.

தற்போது சில ஆண்டுகளின் முன்னதாக, திருக்கோணாசல நகரத்தின் ஓரோர் பகுதிகளில் ஸ்ரீ கோணைநாயகரது ஆலயப் பொருள்கள், விக்கிரகங்கள் ஆதியனவைகளில் சில பூமியின் கீழ் எடுக்கப்பட்டதாக வதந்திகள் உண்டு. தற்போது சில தினங்களின் முன்னதாக திருக்கோணமலை நகர சபையார் தோண்டுவிக்கத் தொடங்கிய ஒரு கிணற்றில் சுமார் மூன்று அடி ஆழத்தில் மூன்று தாம்பிர விக்கிரகங்கள் எடுக்கப்பட்டு, நகரசபை மண்டபத்தில் சைவமக்களுடைய பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததைக் கொண்டு, கர்ணபரம்பரையாக நாம் அறிந்துள்ள பழங்காலச் சரித்திரங்கள் உண்மையென்று தீர்மானிக்கலாம்.

பறங்கிக்காரர் கோணேசராலயத்தைக் கைப்பற்றியவுடன், அதன் தங்கமயமான கோபுரச் சிறப்பையும், அமைப்பையும் கண்டு வியந்து, அக் கோணேசராலயத்தைப் படம்பிடித்து வைத்துக் கொண்டுதான் தரைமட்டமாக இடித்து, அக் கற்களைக் கொண்டுதானே தற்போது அரசாங்கப் பாதுகாப்பு இடமாக உள்ள கோட்டையின் புறமதில்களை கட்டுவித்தனரென்பர். அவர்கள் அப்போது பிடித்த கோணைநாயகரின் ஆலயப் படம் போர்த்துக்கல் தேசத்தில் தற்போது இருப்பதாக அறிந்து, அங்கிருந்து அதன் பிரதிப்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இங்குள்ள சில சைவமக்களின் முயற்சியால் எடுக்கப்பட்டுள்ளது. அதன் அமைவையும் சிறப்பையும் உற்றுநோக்கிய சைவமக்கள் ஸ்ரீ கோணைநாயகருக்கு அத்தலத்தில் ஓர் ஆலயத்தை அமைத்து, தற்போது அகப்பட்ட விக்கிரகங்களை யெல்லாம் ஆகமமுறைப் பிரதிட்டை செய்து பூசை நடைபெறச் செய்ய வேண்டுமென அவாவுறுகின்றனர். பின்னர் இங்ஙனமெல்லாம் நிகழவிருந்த "திருக்கோணாசல வைபவத்தைச்" சிறிதாவது சிறப்புறத் தொடர்புசெய்து முன்னர் எழுதிவைத்த ஸ்ரீமான் வே. அகிலேசபிள்ளை அவர்கட்கும், அச்சுவாகித பத்திரத்தையெல்லாம் பேணிவைத்துத் தற்போது அச்சிற்பதிப்பித்துச் சைவமக்கட்கு உதவிய அன்னார்தம் புத்திரன் ஸ்ரீமான் வ. [illegible] அவர்கட்கும் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

பிரமஸ்ரீ கு.கு.கா.கு.பகு யோகீஸ்வரக்குரு.

விகிர்தி வருடம்
ஆவணி மாதம்
௧அ (18)ந் நாள்



உ

# சிறப்புப் பாயிரம்

யாழ்ப்பாணம் நவாலியூர்
திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர்கள்
எழுதி உதவியது

## கலித்துறை

வானாடருந் தொழுங் கோணா சலத்தல மான்மியத்தை
மேனாளுரைத்தருள் சூதனுள் விழுமிய வேதிரட்டித்
தானாக வேய்பாரு நூலுரைத் தான்றமிழ் நன்கறிந்த
ஆனாப் பெருஞ்சீ ரகிலேச பிள்ளை அருந்தவனே. (1)

வண்டு பலமலர் நாடிச்செந் தேனை மகிழ்ந்தெடுத்துக்
கொண்டொரு கூட்டினிற் கூட்டிவைத் தாலெனக் கூறுமந்நூல்
கண்டு விழுமிய சேர்த்தெடுத் தேகற்ற வர்மகிழ்ச்சி
கொண்டு சிறந்திடக் கோணேசர்மான்மியங் கூறினனே. (2)

தொழுவார்க்கருள் திருக்கோணேசன் பாதத்துணை பிடித்தே
வழுவா நெறியே ரகிலேச பிள்ளை வரைந்தவந்நூல்
அழியா தவன் தருமைந்த னவ்வகையன் கோனருளால்
எழுதா வெழுத்திலிடுவித் துலகிற்கு ஈந்தனனே. (3)

எப்பா வலர்க்கு மினியதாக் கோண வியல்பையுரை
அப்பா வலனூல் அச்சிற் பதிப்பித்த தனித்தவனும்
இப்பாலுறுதிகள் யாவையு மெய்தியின்புறுவரோ
டப்பா லுலகினும் பல்லூழி வாழி யமர்ந்தினிதே (4)

க. சோமசுந்தரப்புலவன்.

நவாலியூர்
9-8-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | iii |
| இரண்டாம் பதிப்புரை | v |
| முதலாம் பதிப்புரை | vii |
| பதிப்புரிமை | viii |
| முகவுரை | ix |
| மதிப்புரைகள் | x |
| சிறப்புப் பாயிரம் | xiii |
| பொருளடக்கம் | xiv |
| திருக்கோணாசல வைபவம் | 1 |
| திருக்கோணமலைச் சரித்திரம் | 2 |
| மச்சேந்திரபருவதச் சரித்திரம் | 7 |
| மாவலிகங்கைச் சரித்திரம் | 9 |
| அகஸ்தியமுனிவர் சரித்திரம் | 12 |
| இராவணன் சரித்திரம் | 15 |
| விட்டுணுமூர்த்தி சரித்திரம் | 19 |
| கன்னிகைத்தீர்த்தம் உற்பத்தியான சரித்திரம் | 23 |
| இராமர் சரித்திரம் | 25 |
| வரராமதேவர் சரித்திரம் | 25 |
| குளக்கோட்டுமகாராசா திரிகோணாசலத்தில் திருப்பணி செய்து .... | 28 |
| ஆடகசௌந்தரி சரித்திரம் | 32 |
| திருக்குளச் சரித்திரம் | 34 |
| திருக்கோணைநகரிற் குடியேறிய சரித்திரம் | 40 |
| குளக்கோட்டுமகாராசா மணம்புரிந்த சரித்திரம் | 45 |
| குளக்கோட்டுமகாராசா சிவபதமடைந்த சரித்திரம் | 46 |
| கயவாகுராசன் சரித்திரம் | 47 |
| நளச்சக்கரவர்த்தி சரித்திரம் | 51 |
| மாருதப்புரவீகவல்லி சரித்திரம் | 51 |
| புவனேகவாகு சரித்திரம் | 51 |
| பரராசசேகரன், செகராசசேகரன் சரித்திரம் | 52 |
| ஆரியச்சக்கரவர்த்தி சரித்திரம் | 52 |
| தனியுண்ணாப் பூபாலவன்னிமை கனகசுந்தரப்பெருமானிடம் ... | 53 |
| நம்பலகமச் சரித்திரம் | 57 |
| தற்கால சரித்திரம் | 59 |
| வெள்ளைவில்லத்தடி கோணநாயகர் கோயிற் சரித்திரம் | 60 |
| குளக்கோட்டுமகாராசா மதுரையிலிருந்து அழைத்து வந்த ........ | 61 |
| வெருகற் சரித்திரம் | 66 |
| கோணேசர் கல்வெட்டு - பொழிப்புரையுடன் | 69 |
| இலங்கையிலுள்ள வரலாற்றுத் ... சைவாலயங்களும் தீர்த்தங்களும் | 102 |
| திருக்கோணமலைத் திருப்பதிகம் - தேவாரம் - திருப்புகழ் | 104 |
| திருக்கோணாசல நாகதம்பிரான் | 113 |
| திருக்கோணேசர் பஜனை | 121 |
| அநுபந்தம் | 123 |
| பின்னுரை | 126 |




கோயிலும், சுனையும், தாமரை, செண்பகம், புன்னை, மல்லிகை பொழில் சேர்ந்த கோணேஸ்வரம்




# நூலாசிரியர்

புலவர் ஸ்ரீமான் வேலுப்பிள்ளை அகிலேசபிள்ளை

திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை


போர்த்துக்கேயரால் கோணேஸ்வர ஆலயம் இடித்து அழிக்கப்பட்ட போது விடுபட்ட ஆலயத்தின் கற்றூண் ஒன்று மலையுச்சியில் ஆலயம் அமைந்திருந்த இடத்தை நினைவுகூர்வதற்காக ஆலய முகப்பில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று இப்படிக் காட்சியளிக்கிறது.



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை


கோணேஸ்வரர் கோவில் – விநாயகர் விக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போட்டோ உதவி: நா.கணபதிப்பிள்ளை

தற்போது உள்ள கோணேஸ்வர ஆலயத்தைக் கட்டுவித்த சிவபக்தர் உயர்திரு சிவரத்தின உடையார் அவர்கள் மூல ஸ்தானத்தில் ஸ்தாபிப்பதற்காக, நருமதை ஆற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட சுயம்பு லிங்கத்தை ரிஷிகேசம் சுவாமி. சிவானந்த சரஸ்வதி மஹாராஜ் அவர்களைக் கொண்டு ஆசீர்வதிப்பித்து எடுத்து வருகிறார். இந்த லிங்கம் தான் இன்று மூல ஸதானத்தை அலங்கரிக்கிறது.



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை

இன்று காட்சியளிக்கும் கோணேஸ்வர ஆலயத்தைக்
கட்டுவித்த சிவபக்தர் உயர்திரு சிவரத்தின உடையார் அவர்களால்
நருமதை ஆற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டு
மூல ஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுயம்பு லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை

மாதுமைசமேத கோணேஸ்வரர்



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை

கோணேஸ்வரர் கோவில் விக்கிரகங்கள்




நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை


திருக்கோணேஸ்வரர் கோவில்

அம்பிகா நடேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோணேஸ்வரர் கோவில் – நால்வர் விக்கிரகங்கள்




மலையில் அமைந்திருந்த மஹாவிஷ்ணு கோவிலில்
இருந்த – லக்ஷமி சமேத மஹாவிஷ்ணு சிலைகள்.



அலங்காரத்துடன் மூல லிங்கேஸ்வரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணேஸ்வரத்தில் திரு. கிர்த்திதாஸ் அவர்களால்
அண்மையில் அமைக்கப்பட்ட ஆலய மணிக் கோபுரம்




திருக்கோணேஸ்வரம் – தென்கயிலை மலை உச்சியில்
அமைந்த பழமைவாய்ந்த கல்ஆல் (ஸ்த்தல விருட்சம்)




கோணேஸ்வரத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட
பஞ்சமுக நாகேஸ்வரர் (ஐந்துதலை நாகம்) வாழும் புற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிழற்பட உதவி: நா.கணபதிப்பிள்ளை

6000 ஆண்டுகளுக்கு முன் இராவணன் தன் தாயாருக்கு அந்தியக் கடமைகள் செய்வதற்கா கன்னியாவில் அமைத்த ஏழு வெந்நீர் ஊற்றுக் கிணறுகள்



திருக்கோணமலை – கன்னியாவில் அமைந்துள்ள சிவன் கோவில் (இன்றைய நிலை)



கன்னியாவில் அந்துள்ள 7 வெந்நீர் ஊற்றுக் கிணறுகளின் இன்றைய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துவாபர யுகத்தில், இற்றைக்கு 6000 ஆண்டுகளுக்கு முன் இலங்கையை ஆண்டவனும், தென்கைலையை பெயர்த்தவனுமான, தமிழ் வேந்தன் இராவணனின் ஆற்றலை வெளிப்படுத்தும் கற்பனா சொரூபம், கோயிற் கோபுரத்தில் அமைந்துள்ளது



இராவணன் தென்கயிலையை பெயர்ப்பதற்காக மலையைத் தன் வாளினால் வெட்டியதால் ஏற்பட்ட இராவணன் வெட்டு

உ

வீரகத்தி விநாயகர் துணை.

# திருக்கோணாசல வைபவம்

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் உள்ள பல நாடுகளுள் மிகவுஞ் சிறந்து விளங்குகின்ற ஈழநாடாகிய இலங்கையிலே *தக்ஷிணகைலாயம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம், கரசையம்பதி, கண்டகிவடகாந்தாரம், குமரபுரம், மாவிட்டபுரம், வல்லிபுரம், பொன்னாலயம், பிரளயவைரவர் கோயில், திருக்கோயில், நகுலகிரி, சோதிஷ்காமகிரி, உகந்தகிரி, கந்தபருவதம், மச்சேந்திரபருவதம், தேனுபருவதம், திரிகூடபருவதம், சிவசோதிபதம், சமனாசலம், விநாயகாசலம், சப்பிரகாமம், சுவேலகிரி, அகவகிரி, களனிமலை முதலிய புண்ணிய ஸ்தலங்களும் மாவலி கங்கை, மாணிக்க கங்கை, காவேரி கங்கை, நகுலகிரித் தீர்த்தம், கன்னியாத் தீர்த்தம், நவக்கிரித் தீர்த்தம், யமுனாரித் தீர்த்தம், அமுதகளி முதலிய புண்ணிய தீர்த்தங்களும் உண்டு. இவைகளுள் தக்ஷணகைலாயம், திருக்கேதீஸ்வரம் என்னும் இரண்டு ஸ்தலங்களும் சிவபெருமானுக்கும், வல்லிபுரம், பொன்னாலயம் என்னும் இரண்டு ஸ்தலங்களும் விட்டுணுவுக்கும் கண்டகிவடகாந்தாரம், சோதிஷ்காமகிரி, கந்தபருவதம் என்னும் மூன்று ஸ்தலங்களும் சுப்பிரமணியருக்கும் விசேஷ ஸ்தலங்களாகும். இலங்கை யானது மகாமேரு பருவதத்தின் சிகரங்களுள் ஒன்றை வாயுபகவான் பறித்துத் தென் சமுத்திரத்தின் மத்தியில் வைத்ததினால் உற்பத்தியானதாலும், தக்ஷணகைலாயம் இருப்பதாலும், குபேரன் முதலிய தேவர்களிருந்து அரசு செய்தமையாலும், பரதகண்டத்திலுள்ள மற்றுந் தேசங்களைப் பார்க்கிலும் மிகுந்த விசேஷமுடைய தாயிருக்கின்றது.

* இலங்கையின் வரலாற்றுத் தொன்மைவாய்ந்த சைவாலயங்கள் - பார்க்க பக்கம் 102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலைச் சரித்திரம்

திருக்கைலாச மலையிலே சிவபெருமான் அனந்தகோடி சூரியப் பிரகாசமுள்ள சிங்காசனத்தின் மேலே தமது அருட்சத்தியாகிய உமாதேவி யாரோடு இடப வாகனத்தின் மேல் வீற்றிருந்தருளினார். அப்போது பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்களும், கணநாதர்களும் சிவபெருமான் முன்பு வந்து, அட்டாங்கமும் பூமியிற்றோயும்படி விழுந்து திருப்பாதங்களை நமஸ்கரித்து எழுந்து நின்றார்கள். சிவபெருமான் அவர்கள் மீது திருவிழிக் கடை பரப்பி அனுக்கிரகம் பாலித்தார். அதன் பின்பு சிவபெருமான் சகல தேவர்களையும் நோக்கித், தேவர்களே! பிரமாவுக்குப் படைத்தற் றொழிலை யும், விஷ்ணுவுக்குக் காத்தற் றொழிலையும், உருத்திரனுக்கு அழித்தற் றொழிலையும், ஆதிசேடனுக்குப் பூமியைத் தாங்குந் தொழிலையுங் கொடுத்தோம் என்று சொல்லியருளினார். அதுகேட்ட வாயுபகவான் சிவபெருமான் முன்பு வந்து திருவடிகளை வணங்கி வாய்புதைத்து நின்று, சுவாமி! பதின்னாலு உலகங்களிலும் இயங்குகின்ற என்னைப் பார்க்கிலும் இந்தச் சேடன் மிகுந்த வலிமையுடையவனா? என்றான். அது கேட்ட ஆதிசேடன் அதிக கோபங்கொண்டு, கால மதியுடைய வாயுபகவானே! எப்போதும் என்னுடைய போசனமாய் இருக்கப்பட்ட உனக்கு என்ன பலமிருக்கிறது? என்றான், அப்போது வாயுபகவான் ஆதிசேடனை நோக்கி, சேடனே! உன்னைப் போல நான் கெருடனுக்குப் பயப்படமாட்டேன். ஆனால் உன்னுடைய ஆன்மாவையும் நான் தாபரிக்கிறேன் என்பதை நீ அறியாமல் இந்தச் சபையிலே உனது வீரத்தைக் குறித்துப் புகழ்ந்து பேசினாய். ஆயின், சிவபெருமானுடைய உத்தரவைப் பெற்று நாமிருவரும் யுத்தஞ் செய்யலாம் வருவாயாக என்று அழைத்தான். ஆதிசேடனும் அதற்கு இசைந்தான். அதன் பின்பு இருவரும் சிவபெருமானிடம் உத்தரவு பெற்று யுத்தஞ் செய்ய எத்தனிக்கும் போது, தேவர்கள் இருவரையும் நோக்கி, நீங்கள் யுத்தஞ் செய்து உங்கள் வீரபராக்கிரமத்தை எங்களுக்குக் காட்ட எத்தனித்து விட்டீர்கள். ஆனால் நாங்கள் சொல்லும் பிரகாரமே நீங்கள் நடக்க வேண்டும். அது எவ்விதமெனில், ஆதிசேடன் திருக்கைலாச மலையின் சிகரங்களைத் தனது பணாமகுடங்களினால் மறைத்துக் கொள்ள வேண்டும். அப்போது வாயு பகவான் தனது வல்லமையினால் ஒரு சிகரத்தையாவது பறித்தெடுக்க வேண்டும். அப்படிச் செய்வீர்களானால் உங்கள் வல்லபத்தை நாங்கள் அறியலாம் என்றார்கள். தேவர்களுடைய வாக்கை இருவரும் கையேற்ற பின்பு, ஆதிசேடன் வெள்ளிமயமாகிய திருக்கைலாய மலையை அடியிலிருந்து சுற்றிக் கொண்டு போய் முடிகளைத் தனது பணாமகுடங்களினாலே மறைத்துக் கொண்டிருந்தான். அப்போது வாயு பகவான் மிகுந்த பராக்கிரமத்துடன் பிரசண்டமாக வீசினான். இவர்கள் செய்யும் கொடிய யுத்தத்தினால் அண்ட கோளங்கள் அசைந்தன. சப்த



சமுத்திரங்களும் வரண்டன. அட்ட நாகமும், அட்ட யானையும், அட்ட குலபருவதங்களும் தத்தம் இருப்பிடம் விட்டு அடி பெயர்ந்தன. முகிற் கூட்டங்கள் தீப்ந்தன. அக்கினி பகவானும் வெப்ப மாகினன். உலகத்திலுள்ள சராசரங்களெல்லாம் அச்சம் கொண்டன. பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் அயர்ச்சி கொண்டு, சிவபெருமான் முன்பு வந்து, திருப்பாதங்களை வணங்கி, வாய் புதைத்து நின்று, சுவாமி! ஆதிசேடனும் வாயு பகவானுஞ் செய்கின்ற கொடிய யுத்தத்தினால் அண்ட புவன சராசர மனைத்தும் இமைப்பொழுதுக்குள்ளாக ஒழிந்து விடுவதற்கு ஏதுவாயிருக்கின்றது. ஆகையால் தேவரீர் திருவுளமிரங்கிக் கிருபை பாலிக்க வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அப்போது சிவபெருமான் பிரமாவை நோக்கி, பிரமனே! இந்த உத்தர கைலாய பருவதத்திலே தெற்குப் பக்கத்திலுள்ள திரிகோண சிகரத்திலோர் கைலாயபீடத்தைச் சீக்கிரம் உண்டாக்குவாயாக என்று திருவாய்மலர்ந் தருளினார். உடனே பிரமாவானவர் உத்தரகைலாயமானது எவ்வித அலங் காரங்களை உடையதாக இருக்கின்றதோ அதுபோலத் திரிகோண சிகரத் திலே மிகவும் உத்தமமான ஒரு கைலாயபீடத்தைச் சீக்கிரத்திலே செய்து முடித்தார். அதன் பின்பு சிவபெருமான் அனந்தகோடி சூரியர்களது ஒளியைப் போலும் பேரொளியையுடைய சொர்ண மயமான இலிங்க ரூபியாகிப் பிரமாவினாற் சிருட்டிக்கப்பட்ட திரிகோண கைலாயபீடத்தின் மீது உலகமாதா வாகிய உமாதேவியார் இடப்பாகத்தின் மேவ எழுந்தருளியிருந்து, ஆதி சேடனை நோக்கி, சேடனே! நான் உனக்கு ஓர் இரகசிய வார்த்தையைச் சொல்லப் போகிறேன் மிகுந்த கவனத்தோடு கேட்க வேண்டும் என்று சொல்லியபோது, ஆதிசேடன் தனது ஆயிரந்தலைகளிலே ஒருதலையைச் சாய்த்தான். அப்போது சிவபெருமான் சேடனை நோக்கி, "சேடனே! கேட்பா யாக, குமரிக் கண்டமானது மற்றைய கண்டங்களைப் பார்க்கிலும் மிக விசேஷ முடையது. அதுவன்றித் தக்ஷண திசையில் உள்ளவர்களையும் இரக்ஷிக்க நாம் சித்தங்கொண்டோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். ஆதிசேடன் தனது தலையிலே ஒன்றைச் சாய்த்துச் சிவபெருமானுடைய திருவாக்கைக் கவனமாகக் கேட்குந் தருணத்திலே, வாயுபகவான் சிவபெரு மான் எழுந்தருளியிருந்த திரிகோண சிகரத்தையும் அதற்குப் பக்கத்திலுள்ள வேறு இரண்டு சிகரங்களையும் பறித்தெடுத்தான். அதுகண்ட சிவபெருமான் வாயு பகவானை நோக்கி வாயுவே, இப்போது நீ பறித்தெடுத்த மூன்று சிகரங் களிலே திரிகோண சிகரத்தைவிடுத்து, மற்றை இரண்டு சிகரங்களில் ஒன்றைத் [#] தொண்டை நாட்டிலும் ஒன்றைச் [√] சோழ நாட்டிலுங் கொண்டுபோய்

[#] தொண்டை நாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருக்காளத்தியெனப் பெயர்பெறும். சிலந்தி, பாம்பு, கண்ணப்பநாயனார், சிவகோசரியார், நக்கீரர் முதலியவர்கள் முத்தியடைந்த ஸ்தலம்.

[√] சோழ நாட்டில் வைக்கப்பட்ட சிகரம் திருச்சிராப்பள்ளியெனப் பெயர்பெறும். செவ்வந்திப் புட்பத்துக்காகச் சிவபெருமான் மேற்கு முகமான ஸ்தலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து வருவாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். வாயு பகவான் சிவபெருமானுடைய திருவாக்குப் பிரகாரஞ் செய்து முடித்தான். அதன் பின்பு சிவபெருமான் வாயு பகவானை அழைத்து, நாம் எழுந்தருளியிருக்கும் திரிகோண சிகரத்தை எடுத்துக்கொண்டு போய் ஈழநாட்டிலே சமுத்திரக் கரையிலே வைப்பாயாக என்று சொல்லி அருளினார். அதைக் கேட்ட வாயுபகவான் வசந்தருதுவாகிய சித்திரை மாதத்திலே ஞாயிற்றுக் கிழமையும் பூரணைத் திதியும் அத்த நக்ஷத்திரமும் விருத்தி யோகமும் பத்திர கரணமுங் கூடிய சுபதினத்திலே குரு ஓரையிலே சனி முதலிய கிரகங்கள் மகர முதலிய ஆட்சி ராசிகளிலே இருக்க, இடப லக்கினத்திலே சிவபெருமான் வீற்றிருந்தருளிய திரிகோண சிகரத்தை எடுத்துவந்து, திரிகூடபருவதத் துக்கு முப்பது யோசனை தூரத்திலே சமுத்திரக் கரையிலே வைத்தான். அன்று தொடக்கம் அது தக்ஷிணகைலாயம் எனவும் திரிகோணமலை யெனவும் பெயர் பெற்றது.

திருகோணமலையானது முத்தி நகரங்களுள் ஒன்றாகிய மதுரைக்கு கிழக்குப் பக்கமாகவிருக்கும். திருகோணமலை பூமியின் கீழாக ஒரு யோசனை ஆழமும், பூமியின் மேலாக ஆறு தண்டம் உயரமும், பதினைந்து தண்டம் அகலமும் உள்ளதாயிருக்கும். இத் திரிகோண பீடத்திலே ஒன்பது பிரகாரமுண்டு. முதலாவதாகிய நவரத்தினப் பிரகாரத்தின் நடுவிலே கற்பகவிருக்ஷ மூலத்திலே ஆயிரம் ரத்தினத் தூண்களும், நூறு பொற் றூண்களும் நிரைத்துச் சிந்தாமணியாற் செய்யப்பட்ட ஓர் இரகசிய ஆலய முண்டு. அவ்வாலயத்துக்குப் பரமானந்தம் என்னும் பெயருண்டு. இந்த ஆலயமானது ஆறு மண்டபங்களையும், விசித்திர ரத்தினப்பிரகாச முள்ள நாலு கோபுர வாயில்களையும், கொடிகளால் விளங்குஞ் சிகரங்களையும், இரத்தினத் தோரணங்கள் அசைகின்ற சாளர வாயில்களையும் உடையதாக இருக்கும். அந்தச் சிந்தாமணி ஆலயத்தின் நடுவே சூடாமணியாற் செய்யப் பட்ட விமானம் ஒன்றுண்டு. அதன் கொடிமுடியானது கோடி சந்திரப்பிரகாசமும் வெண்மை நிறமும் மூன்று கோணமும் பராசத்தியின் ரூபமும் உடையதாக இருக்கும். அந்தச் சூடாமணி விமானத்தினுள்ளே பஞ்சப் பிரமமயமா யுள்ள இரத்தின மஞ்சத்தின் மத்தியிலே பதுமாசனத்தின் மீதிலே கோணைநாயகர் ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்களும், புட்பபாணம், கருப்புவில், அங்குசம், பாசம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், அனந்தகோடி சூரியப் பிரகாசமும், புன்சிரிப்பும் உடையராய், உலகமாதாவும் தாமெடுத்த மூர்த்தத்துக்கு ஏற்ற வடிவுகொண்டவரும் ஆகிய அன்னமென்னடையம்மை என்னுந் தமது தேவியார் இடப்பாகத்தின் மேவ வீற்றிருந்து அருளுவர்.

இரண்டாவதாகிய மரகதப் பிரகாரத்திலே புத்தி என்னுஞ் சத்தியோடு மகேசுரன் வசிப்பார். மூன்றாவதாகிய சூரியகாந்தப் பிரகாரத்திலே பதினொரு



உருத்திரர்கள் வசிப்பார்கள். நான்காவதாகிய சந்திரகாந்தப் பிரகாரத்திலே சிவசொரூப முள்ள ஐம்பத்தொரு சக்திகளும், சதாசிவத்தைத் தியானித்துக் கொண்டிருக்கும் ஒன்பது சக்திகளும் வசிப்பார்கள். ஐந்தாவதாகிய மாணிக்கப் பிரகாரத்திலே நடராஜமூர்த்தியும் ஏழு கோடி மகாமந்திரங்களும் உண்டு. ஆறாவதான படிகரத்தினப் பிரகாரத்திலே விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், மகாகாளர், சிவகுமாரர், ஐயனார், நந்தி, பிருங்கி, துர்க்கை, உருத்திரசத்தி, கணங்கள், காமதேனு, இடபம், உருத்திரன், உருத்திராணி இவர்கள் யாவரும் வசிப்பார்கள். ஏழாவதான நீலரத்தினப் பிரகாரத்திலே அளவிறந்த பிரம்மாக்களும் விட்டுணுக்களும் இந்திரர்களும் தேவரிஷிகளும் பிரமரிஷிகளும் வசிப்பார்கள். எட்டாவதான சொர்ணப் பிரகாரத்திலே அமரர் சித்தர். அசுரர், கருடர், கந்தருவர், கின்னரர், கிம்புருடர், நிருதர், தைத்தியர், இயக்கர், விஞ்சையர், முனிவர், உரகர், பூதர், பைசாசர், அந்தரர், ஆகாய வாசியர், போகபூமியர் என்னும் பதினென் கணத்தவர்களும், செயை, விசயை, சுபர், இறீ, சிறீ, மதி, துஷ்டி, சாந்தி, வேதா, காந்தி, சித்தா, கீர்த்தி, புஷ்டி என்னுந் தேவ கன்னியர்களும், உருத்திர கூட்டங்களும், பூத சேனாதிபர்களும், தெய்வ பசுக்களும், சிந்தாமணி, சூடாமணியும் சங்கநிதி, பதுமநிதிகளும் அப்சர ஸ்திரீகளும் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் பன்னிரண்டு ராசிகளும் நான்கு வேதங்களும் இருபத்தெட்டு ஆகமங்களும் பதினெட்டு ஸ்மிருதிகளும் பதினென் புராணங்களும் ஆறு சாஸ்திரங்களும் அறுபத்துநான்கு கலைஞானங்களும் உருத்திர சாருபர்களும் நவக் கிரகங் களும் வசிப்பார்கள். ஒன்பதாவதான இரசதபிரகாரத்திலே பிரணவமயமான அநேக வெள்ளை யானைகளும் சதுர்வேத ரூபமான அனேக குதிரைகளும் அநேக பூதகணங்களும் வசிப்பார்கள். இந்தப் பிரகாரத்திலே உன்னதமான நாலு கோபுரங்களையுடைய நாலுவாயில்களுண்டு. அந்த நாலு வாயில் களின் வழியாகப் பிரமலோகம் தேவலோகம் நாகலோகம் அயோத்தியாபுரி என்னும் இடங்களுக்குப் போகக்கூடியதாக இருக்கும். இப்பிரகாரத்துக்கு அப்பால் நாலுதிக்கிலும் நாலு யோசனை தூரம் வரைக்கும் சாம்பூநதம் என்னும் பொன்மயமான பூமியுண்டு . அதிலே மந்தாரம் பாரிசாதம் குங்குமம் அகில் சல்லியகரணி சந்தானகரணி மிருத்துசஞ்சீவி முதலிய விருக்ஷங்களாற் சூழப்பட்ட சிங்காரமான நந்தவனங்களும், அவ்வனத்தின் நடுவிலே அன்னப் பக்ஷிகள் வசிக்கின்ற ஓர் பொற்றாமரைத் தடாகமும், அட்டகுல பருவதங் களும், சப்தநதிகளு முண்டு. அனேக உருத்திரர்களும் பூதகணங்களும் அவ்வனத்திலே வசிப்பார்கள். அந்தப் பொன்மயமான பூமி ஒருவெள்ளி மதிலாற் சூழப்பட்டிருக்கும். அந்த வெள்ளிமதிலுக்கப்பால் ஒரு பொன் மதிலுண்டு. அந்தப் பொன்மதிலிலே எட்டுக்கோபுரவாயிலுண்டு. அவற்றிலே கிழக்குவாசலிலே விநாயகரும், தென்கிழக்குவாசலிலே வீரபத்திரரும், தெற்கு வாசலிலே நந்தியும், தென்மேற்கு வாசலிலே வைரவரும், மேற்கு வாசலிலே சுப்பிரமணியரும், வடமேற்கு வாசலிலே பத்திரகாளியும், வடக்கு வாசலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகாளரும், வடகிழக்கு வாசலிலே ஐயனாரும் தங்களுடைய கணங்க ளோடு கூட வசிப்பார்கள். தக்ஷிணகைலாயத்துக்கு எட்டுத்திக்கிலும் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் திக்குப்பாலகர்கள்; சசி, சுவாகா, சங்காரி, தாமசி, பார்க்கவி, சதாகதி, சம்பார்க்கரி, உருத்திராணி என்னும் தங்கள் மனைவியரோடு கூட வசிப் பார்கள். திருக்கோணமலைக்கு மூன்று கோணத்திலும் வேதா, விரிஞ்சி, பூசிருஷ்டர், பதுமநாபர், பிதாமகர், கமலவாசி, சுயம்பு, சதுர்முகர், விசுவ சிருஷ்டர் என்னும் ஒன்பது பிரமாக்களும், விட்டுணு, தாமோதரர், கிருஷ்ணர், வாசுதேவர், அச்சுதர், சரோருகர், ஸ்ரீபதுமநாபர், கேசவர், நாராயணர், சக்கரபாணி என்னும் பத்து விட்டுணுக்களும்; சங்கரர், சம்பு, கிரீசர், சமாரிஷர், கபாலதரர், விருபர், பகவான், சூலி, வாமேசர், தீபதிமூர்த்திமான், கங்காதரர் என்னும் பதினொரு உருத்திரர்களும் வசிப்பார்கள்.

திருக்கோணமலையிலே ஏழு குகைகள் உண்டு. அதில், வடக்குத் திசையிலுள்ள குகையிலே அகஸ்தியர், புலஸ்தியர், வாம தேவர், அரிதர், உரோமசர், புலகர், உசத்தியர், வசிட்டர் முதலிய ரிஷிகள் பிரதிஷ்டையுடன் இருப்பார்கள். வடமேற்குக்குகையிலே நாகலோகத்துக்குப் போகும் வழி யுண்டு. வடகிழக்குக் குகையிலே மோக்ஷ வீடுண்டு. மேற்குக் குகையிலே மகாவலிகங்கை வந்து பிரவாகிக்கும். தென்மேற்குக் குகையிலே வெள்ளி யினாற் செய்யப்பட்ட ஓர் ஆலயமுண்டு. அந்த ஆலயத்து வாசலிலே அநேக பூதங்கள் காவலாக இருக்கும். மேற்குக் குகையிலே இரத்தின தீர்த்தமும், கிழக்குக் குகையிலே மவுத்திக தீர்த்தமும் உண்டு.



# மச்சேந்திர பருவதச் சரித்திரம்

சிவபெருமானிடத்திலே அருமையான வரங்களைப் பெற்றவனும், கெட்டசித்தமும், மூடபுத்தியும் உடையவனுமாகிய இரணியன் என்னும் ஓர் அசுரன், இந்திராதி தேவர்களுக்கெல்லாம் மிகுந்த நிட்டுரங்களைச் செய்துவந்தான். தேவர்கள் அவனுடைய இடுக்கண்களைச் சகியாதவர் களாகி, மேலுந் தாங்கள் வருத்தத்தை அடையாமல், மந்திர சித்தியுள்ள ஒரு கங்கணத்தைத் தங்கள் கையிற் தரித்திருந்தார்கள். அதைக் கண்ட இரணியன் மிகுந்த கோபங்கொண்டு, அக் கங்கணங்கள் எல்லாவற்றையும் அறுத்துச் சமுத்திரத்தில் எறிந்து விட்டு, தனது குலகுருவாகிய சுக்கிராச் சாரியனை அழைப்பித்து, அக் கங்கணங்களிலுள்ள மந்திர சித்தியெல்லாம் ஒழிந்து போகும்படியாக ஒரு கிரிகையைச் செய்வித்தான். அப்போது தேவர் கள் மிகுந்த வியாகுலத்தோடு திருக்கோணமலைக்கு வந்து, கோண நாயகரைப் பிரார்த்தித்துக்கொண்டு கோபுர வாயிலில் நின்றார்கள். அச் சமயத்திலே விட்டுணு மூர்த்தி அவ்விடம் வந்து, தேவர்களை நோக்கி " தேவர்களே! உங்கட்கு நேரிட்ட துன்பம் யாது? அதைச் சொல்லுங்கள். நான் தீர்த்து உங்களைக் காத்துக்கொள்வேனென்றார். தேவர்கள் நடந்த சங்கதிகளை விபரமாகச் சொன்னார்கள். அதைக் கேட்ட விட்டுணு மூர்த்தி தேவர்களைப் பார்த்து, நான் இவ்விடம் திரும்பி வரும்வரைக்கும் அமுத பானஞ் செய்துகொண்டிருக்கக் கடவீர்கள் என்று சொல்லி, பின்பு, கோண நாயகர் எழுந்தருளி இருக்கும் ஆலயத்துட் பிரவேசித்துச் சுவாமியுடைய திருவடிகளை வணங்கி வாய்புதைத்து நின்று, தேவர்களுக்கு நேரிட்ட துன்பங்களையும், அவர்கள் திருக்கோபுரவாயிலில் வந்து நின்று முறையிட்ட தையும் சொன்னார். அப்போது கோணநாயகர் விட்டுணுவைப் பார்த்து, இரணியன் நம்மிடத்திலே மிகுந்த வரத்தைப் பெற்றுக்கொண்ட தன்மையி னாலே எப்போதுந் தேவர்களை வருத்துகின்றான். ஆனால், நீ இப்போது மச்ச ரூபங்கொண்டு சமுத்திரத்துட் பிரவேசித்து, இரணியன் எறிந்த கங்கணங்கள் எல்லாவற்றையும் எடுத்துவந்து தேவர்கள் கையிற் கொடுத்து, அவர்களை இரட்சிப்பாயாக என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அதைக்கேட்டு விட்டுணுமூர்த்தி மச்ச ரூபங்கொண்டு, சமுத்திரத்துட் சென்று, இரணியனால் எறியப்பட்ட கங்கணங்க ளெல்லாவற்றையும் எடுத்துவந்து, திருக்கோணமலைக்கு முன்பாகத் தலையையும் திரிகூட பருவதத்துக்கு நேராக வாலையும் வைத்து, தாமெடுத்துக்கொண்ட மச்சக் கூட்டை விட்டு வெளியே வந்து, தேவர்களுக்குக் கங்கணங்களைக் கொடுத்துத் தேவலோகத்துக்குப் போகும்படி அனுப்பிவிட்டு, பின்பு கோணநாயகருடைய திருப்பாதங்களைப் பூசை செய்து வணங்கி விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org